**கவனிக்க.-** *2014.08.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1878 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1878 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1336* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1343* |

**கவனிக்க.-**பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச் ) சட்டமூலம் ஆகியன 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 5 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, புரட்டாதி மாதம் 22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 4.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடபலாத | லெகுன்தெனிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

8-888

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 5.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஊவா-பரணகம | கம்பஹா பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

8-889

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, புரட்டாதி மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 8.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | ஹிக்கடுவை | மாதம்பே பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் வெல்லபட பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | நாகொட | மாபலகம அத்துமலே பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் கங்கபடபற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

8-899

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, புரட்டாதி மாதம் 22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 4.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | உக்குவெல | வரகமுர பகுதியில் மாத்தளை தெற்குப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |

8-890

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, புரட்டாதி மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 8.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | கல்கமுவ | வல்பாலுவ பிரதேசத்தின் வன்னி ஹத்பத்துவ பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

8-898

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சட்ட அலுவலர் (நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
(காணி உரித்து நிருணயத் திணைக்களம்)

காணி உரித்து நிருணயத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை.**- இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தப்பட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். இதன்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 6 இல் குறிப்பிடப் பட்டுள்ளது) புள்ளி வழங்கல் நடைமுறையின் பிரகாரம் கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகள்.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதியன்று கொண்டிருக்கவேண்டிய தகைமைகள் :

(i) ***கல்வி/ தொழில்சார் தகைமைகள்.***- உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக இருத்தல்/ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டமாணிப் பட்டம் பெற்றிருத்தல் ;

(ii) ***அனுபவம்.***- உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) ***உடல், உள ரீதியான தகைமை.***- ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) ***பிற தகைமைகள் :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படு வதற்குத் தேவையான தகைமைகளை சகலவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (3) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும் ;

(iii) 07/2007 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம் உரிய மட்டத்திற்குரிய மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) இந்நியமனம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு நடவடிக்கை முறையினதும், தாபன விதிக்கோவையினதும் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்.**- ரூ. 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555. (2006.04.25 ஆந் திகதிய 6/ 2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்எல்ஜ-2006 சம்பளத் தொகுதி).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்காணும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்ட சட்டமாணிப் பட்டம் : | | |
| | முதலாம் வகுப்பு சித்தி | 20 | |
| | இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தி | 15 | |
| | இரண்டாம் வகுப்பு கீழ்நிலை சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டு முதலாம் வகுப்பு சித்தி | 15 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டு இரண்டாம் வகுப்பு சித்தி | 10 | |
| | **குறிப்பு.**- சிறப்புத் தேர்ச்சி சகிதம் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். | | |
| | (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும். பட்டத்திற்கு அல்லது சட்டக் கல்லூரித் தகைமை ஆகிய தகைமைகளுள் ஒன்றிற்கு மட்டும்) | | |

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 2. | **மேலதிக தொழில்சார் தகைமைகள் :** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சட்டமாணிப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான 6 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 3 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான 3 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறியொன்றிற்காக (பாடநெறியொன்றிற்கு 2 புள்ளிகள் வீதம்) | | 15 |
| 3. | **மேலதிக அனுபவம் :** சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் - வருடமொன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள்<br><br>(அடிப்படைத் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக, சட்டத்தரணியொருவராகப் பணியாற்றிய 3 வருட சேவைக் காலம் நீங்கலாக)<br><br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதவான் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப் படல் வேண்டும். | | 30 |
| 4. | **கணினி அறிவு :** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப்படிப்பிற்காக தகவல் தொழில்நுட்பப் பாடத்தை பிரதான பாடமாகப் பின்பற்றியிருத்தல் | 15 | 15 |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதங்களுக்குக் குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 10 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 3 மாதங்களுக்குக் குறையாத தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 05 | |
| 5. | **ஆங்கில மொழியில் தேர்ச்சி :** ஆங்கில மொழியில் பின்பற்றப்பட்ட பட்டம்/பட்டப்பின் படிப்புப் பட்டம்/சட்ட முதுமாணிப் பட்டம்/சட்டமாணிப் பட்டம் (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் விடை அளித்திருத்தல் வேண்டும்). | 15 | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 05 | |
| 6. | நேர்முகப் பரீட்சையின்போது வெளிப் படுத்தும் திறமை | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்.**- சகல விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப் படும் :

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 2014.09.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

காணி, உரித்து நிருணய ஆணையாளர் நாயகம்,
காணி, உரித்து நிருணயத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

(ஆ) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பாவித்து முதலாவது பக்கத்தில் 1 தொடக்கம் 14 வரையும். இரண்டாம் பக்கத்தில் மீதியும் வருமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "காணி உரித்து நிருணயத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது 22,935 ரூபா மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்கங்களை தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஊ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்.**- நீங்கள் பூர்த்திசெய்து அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப் படும். ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் இருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காமினி இலங்கரத்ன,
காணி, உரித்து நிருணய ஆணையாளர் நாயகம்.

காணி, உரித்து நிருணயத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

காணி உரித்து நிருணயத் திணைக்களம்

**சட்ட அலுவலர் பதவி**

இல. : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. பிறந்த திகதி :
வருடம் ---- மாதம் ---- திகதி ----.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதியன்று வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| | | |

11. சட்டத்துறையில் பெற்றுக்கொண்ட பட்டம் தொடர்பான விபரங்கள் :
பல்கலைக்கழகம் :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழிமூலம் :----.

12. சட்டத்தரணியொருவராகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணியொருவராக தொழில்சார் அனுபவம் :
வருடங்கள் :----.

14. பிற கல்வித் தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.

15. மொழித்தேர்ச்சி (உரிய கூண்டினுள் ✓ அடையாளமிடுக.)

| மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|
| சிங்களம் | | | |
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |

16. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

..................................... ஆகிய நான், இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானதும், சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்று வழியாக, வினைத்திறன் இன்மை காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை என்பதையும், பதவியை விட்டு விலகிச் சென்றவராகக் கருதப்படவில்லை என்பதையும் உறுதியுரைக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதும் பொய்யானதென அல்லது பிழையானதென நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் நான் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின் தெரியவரும் பட்சத்தில் எந்தவித நட்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

17. **அரச சேவையில் உள்ளவர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

திரு./திருமதி/செல்வி .................................................... அவர்கள் இவ் அமைச்சில்/திணைக்களத்தில் .............................................. ஆக நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராகக் கடமையாற்றுகின்றார் என்பதையும், இவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

8-1076

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014 திசெம்பர் மாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சை அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் நடத்தப்படும். அவ் அட்டவணைக்கு அமைவாக பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்த்துள்ள நகரத்தை தெரிவு செய்வதுடன் விண்ணபத்தில் பரீட்சைக்கு தோற்றுகின்ற நகரத்தையும் நகர இலக்கத்தையும் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளவாறு பிழையின்றிக் குறிப்பிடவும்.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர்.

3. (அ) நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கையும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் ஏதாவது எண்ணிக்கையை அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துறைக்கப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப் படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தரம் III இலுள்ள பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுவர்

(இ) இந் நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றுக்கு உட்பட்டது. சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் 3 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் அலுவலர் சித்தியெய்துதல் வேண்டும்.

(ஈ) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனைத் தொடர்ந்துவந்த சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய சேவையில் இணைந்து 05 வருடங்களிற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் III, II மற்றும் I ஆகியவற்றுக்கு ஏற்புடைய தான மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 × 145 - 11 × 170 - 6 × 240 - 14 × 320 - 23,230 ஆகும். ரூபா 15,440 ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரம் உயர்வும் ரூபா 17,310 ஐக் கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரம் உயர்வும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

*6.* ***தகைமைகள்.***– அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) நன்நடத்தையினை கொண்டவராகவும் தீவின் எப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கான தேகாரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) கீழ்க்குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகள விண்ணப்பப் படிவம் கையளிக்கப்பட வேண்டிய இறுதித் திகதிக்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்.

(2) கல்விப் பொதுத்தராதரப் (உயர் தரப்) பரீட்சையில் சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த எல்லாப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு.**– 4 பாடங்கள் உள்ளடக்கிய பழைய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**கவனிக்கவும்.**– ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2014, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

*7.* **மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்.**– மாவட்டப் பெயர்ப்பட்டியல் 1 இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடம் தொடர்பாக போட்டியிடுகின்ற நகரம் மற்றும் நகர இலக்கம் அட்டவணை 1 இன் படி விண்ணப்பத்தில் பிழையின்றிக் குறிப்பிடவும்.

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை எண்ணிக்கைக்கு விகிதசமமான அந்தந்த மாவட்டத்திற்கான வெற்றிட எண்ணிக்கையிலிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்பப்படவேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்காக அம் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் மட்டுமே போட்டியிட தகைமையுடையவர்களாவர்.

(i) ஏதேனும் மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்கள் அக்குறித்த மாவட்டத்திற்கு விண்ணப்பிக்கும் தகைமைகளைப் பூர்த்தி செய்துமுள்ள விண்ணப்பதாரிகளினால் நிரப்பப்பட முடியாவிடின் வெற்றிட எண்ணிக்கை மாகாணத்தினுள் அண்மித்திருக்கும் மாவட்டங்களுக்கு சனத்தொகை விகிதாசார அடிப்படையில் மீளப் பகிரப்படும்.

(ii) நியமனம் செய்வதற்குள்ள மொத்த வெற்றிட எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாக இருப்பின் அக்காரணத்தின் பேரில் மாவட்ட சனத்தொகை எண்ணிக்கையை அடிப்படையாக கொள்ள முடியாத விடத்து திறமை ஒழுங்கின்படி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பரீட்சையில் அவசியப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைப் பார்க்க குறையுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையின் பேரில் தெரிவுகள் செய்யப்பட மாட்டாது.

(ஆ) ஒரு மாவட்டத்தை சேர்ந்தவராக இருப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள், ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களுள் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) பரீட்சார்த்தி அம் மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

(ii) பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலங்களில் அவர் அம்மாவட்டத்தில் குறைந்த பட்சம் (3) வருடங்களாவது தொடர்ந்து நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். இல்லா விட்டால்,

(iii) அவர் தொடர்ந்து ஐந்து (5) வருடங்கள் அம் மாவட்டத்தில் தனது இரண்டாம் நிலை பாடசாலை கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**– (1) எழுத்துமூலப் பரீட்சையிலிருந்து தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியின் வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கென நேர்முகப் பரீட்சையில் அல்லது கேட்கப்படும் எவ்வேளையிலும் பின்வரும் ஆவணங்களை முன்னளிப்பதற்கு அவர் கட்டுப்பட்டவராவார்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) தொடர்ச்சியாக மூன்று (03) வருட காலப்பகுதியில் வசித்ததை உறுதிப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்புகளிலிருந்தான பிரித்தெடுப்புக்கள் மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவலரால் உரியவாறு வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் ;

(iii) பாடசாலை விடுகைப்பத்திரம்.

(2) எவரேனும் பரீட்சார்த்தியொருவரின் தந்தை அல்லது தாய் அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத் தாபனமொன்றின் இடமாற்றத்திற்குரிய சேவையொன்றில் இருந்தால் அப்பரீட்சார்த்தி தனது, தந்தையின் அல்லது தாயின் பிறப்பிடத்தை தனக்குரிய மாவட்டமாக தெரிவுசெய்து கொள்வதற்கு அனுமதிக்கப்

படுவார். (பெற்றோரின் பிறந்த இடத்தையும் அவர்கள் அரச சேவையிலுள்ளார்கள் என்பதையும் நிரூபிப்பதற்கு ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போதோ அல்லது வேறு எந்த சந்தர்ப்பத்திலும் முன்னளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.)

(3) பரீட்சார்த்தி எவரும் ஒரு மாவட்டத்திற்கு மேற்பட்ட மாவட்டங்களின் வெற்றிடங்களுக்கு போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டார்கள். தாம் மிகவும் விரும்புகின்ற மாவட்டம் யாதென்பதை ஒரு முறை குறிப்பிட்ட பின் அதனை மாற்ற முடியாது.

8. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3 % வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையின் கூடிய புள்ளி மட்டத்தை அடைந்து தகைமை பெறுகின்ற 3 % வீதமான வலது குறைந்த நபர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50% வீதமாவது ஆதல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடைமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி வலது குறைந்த புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர் அங்கவீனமுற்ற ஆளொருவராக அவராகவே கருதக் கூடாது.

9. **பரீட்சைத் திட்டம்**.- (அ) பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(1) மொழித்திறன் - 100 புள்ளிகள் -2 1/2 மணித்தியாலம்

(2) உளச்சார்பு - 100 புள்ளிகள் - 1 மணித்தியாலம்

*மொழித்திறன்*.- வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோர்வை, மொழி மற்றும் கட்டுரை, தரப்படும் கடிதம் ஒன்றை வரைதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல் , கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சார்த்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

*உளச்சார்பு*.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்களில் உள்ள ஆற்றல், தர்க்கரீதியான சக்தி, பொது விவேகம் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினைக் கொண்டிருக்கும். இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கிய 50 வினாக்களைக் கொண்டது எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு**.- (i) கடைமைகளை நிறைவேற்றுவதற்காக பரீட்சார்த்திக்குள்ள தகைமைகளையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப் படுகின்றன.

(ii) சகல எழுத்து மூல வினாப்பத்திரங்களிலும் தெளிவில்லாத கையெழுத்துக்கள் மற்றும் எழுத்துப் பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.

(ஆ) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பினும் நியமனத்திற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகள் குறைந்தபட்சம் நாற்பது (40 %) ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் ஐம்பது (50 %) ஆவது பெற்றுக் கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக வேறுபடுத்தப்பட்ட வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவதற்காக பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட திறைமை ஒழுங்கு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

(இ) *பரீட்சைப் பெறுபேறுகள்*.- விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது WWW.results.exams.gov.lk என்ற இணையத்தளம் மூலம் வெளியிடப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப் பரீட்சை விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரசசேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ செலுத்தலாம். அதற்காக வழங்கப் படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக் காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாத துடன் காசுக்கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

12. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21×29 cm) (சாதாரண ஹாப் சீட்) அளவிலான தாளை உபயோகித்து-

(அ) 1 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) 4 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் 1.1 கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது முழுப்பெயரின் இறுதியிலிருக்கும் பெயரை முதலில் எழுதி பெயரிலிருக்கும் அனைத்து பெயர் முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிட வேண்டும்.

***உதாரணம்.-*** *விண்ணப்பப்படிவத்தின் 1.2 இன்படி முழுப்பெயர்* MATHURATA GAMRALALLGE BUDDHIKA SARATH KUMARA GUNAWARDHANA.

*விண்ணப்பப்படிவத்தின் 1.1 இல்* GUNAWARDHANA, M. G. B. S. K. என்று குறிப்பிட வேண்டும்.

*உரிய மாதிரி படிவத்திற்கு அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணபங்கள் எதுவித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணபங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவார்கள். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.*

***குறிப்பு (1).-*** *பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்படும் நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின் இரண்டாவது விருப்பமாக குறிப்பிட்டுள்ள நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும். அந்த இரண்டாவது நகரத்தில் போதுமான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இல்லாதுவிடின் அண்மித்திருக்கும் நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும். பரீட்சை நடாத்தும் நகரம் தொடர்பாக பரீட்சை ஆணையாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.*

*(2) நியமனம் வழங்க தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படுவது வீண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட முதலெழுத்துக்களுடனான பெயரிலேயாகும். ஆதலினால் தொடர்ந்து வரும் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் பெயரானது சரியாக எழுதப்பட வேண்டும். நியமனம் வழங்கப்பட்ட பின்பு பெயரில் மாற்றங்கள் செய்யவோ அல்லது புதிய பகுதிகளை சேர்க்கவோ நீக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாது.*

*12.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டிருக்கவில்லையெனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.*

*12.2 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2013 (2014)" எனவும் நீங்கள் போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.*

*12.3 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கும் சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், 240,360 ரூபா ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக் கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.*

*12.4 முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2014.09.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்,*
*ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,*
*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*தபாற்பெட்டி இல.1503,*
*கொழும்பு.*

*13.* ***பரீட்சைக்குத் தோற்றுதல்.-*** *விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும்.உங்களிடத்திலுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள் , பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு , என்பவற்றுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவீத்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனின் குறித்த விபரங்களுடன் அனுமதப்பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (பக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பக்ஸ் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.*

*பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் அனுமதி அட்டையில் அவர்களது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும்.மேலும் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு தோற்றும் முதல் சந்தர்ப்பத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத்தவரிய பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.*

*14. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;*

(ii) *செல்லுபடியாகும் கடவுச் சீட்டு (பாஸ்போட்).*

*15. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லா தகுதிகளையும்*

உடையவர் என்பதை ஏற்றுக் கொள்ளுதல் என கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

16. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ் வர்த்தமான பத்திரிகையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

17. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, ஓகத்து 15.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில்**
**தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த**
**போட்டிப் பரீட்சை- 2013 (2014)**

Open Competitive Examination for Recruitment to Grade III of Public Management Assistants Service- 2013(2014)

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீடுகளையும்/ இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களுக்காக அட்டவணை II ஐ பார்க்கவும்)

* வெற்றிடங்களுக்காக போட்டியிவதற்கு வர்த்தமானி அறிவித்தலின் 7 ஆம் பந்திக்கேற்ப நீர் தெரிவு செய்யும் மாவட்டம் :

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| | |

(மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கங்களுக்கு அட்டவணை I ஐப் பார்க்கவும். உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

* நீர் பரீட்சைக்குத் தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலின் 8.0 பந்தியின் பிரகாரம் வலது குறைந்த புனர்வாழ்வு சலுகை நிபந்தனைகளின் கீழா? (இப் பகுதியில் ஆம் என குறிப்பிடப்பட வேண்டியது அங்கவீன விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆகும். இப் பகுதியை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.0 ஐ நன்கு வாசிக்கவும்)

ஆம் - 1
இல்லை - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
உதா: GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

3. 3.1 பால் (ஆண்-0/பெண்-1)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2014.09.29 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. 4.1 நீங்கள் இம்மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்? :-----.

4.2 உதவி அரசாங்க அதிபர் பிரிவு/பிரதேச செயலாளர் பிரிவு : ---

4.3 கிராம அலுவலர் பிரிவு :----.

5. கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.

(ii) பரீட்சை சுட்டெண் :----.

(iii) பெறுபேறுகள் :-

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.

(ii) பரீட்சை சுட்டெண் :----.

(iii) பெறுபேறுகள் :-

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 பரீட்சார்த்தி அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்தை பெற்றிருப்பின்-

(i) பல்கலைக்கழகத்தின் பெயர் :----.

(ii) பட்டம் :----.

(iii) பரீட்சை நடைபெற்ற ஆண்டு :-

6. வேறு தகைமைகள்.-----.

7. நீங்கள் எப்போதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

( உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும் )

ஆம் எனின் விபரங்கள் குறிப்பிடவும் :----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்.----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் .----.

(iii) செலுத்திய பணம் :----.

பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கே ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம்
வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்)

9. **விண்ணப்பதாரரின் சான்றிதழ் :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் நான் இத்தால் வெளிப்படுத்து கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப் படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னராயின் தகைமை நீக்கத் திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவை யிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...............................................என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்.-----.
பதவி.-----.
முகவரி.----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
திகதி :----.

அட்டவணை I

**மாவட்டப் பெயரும் இலக்கமும்**

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலநறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனறாகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

அட்டவணை II

**பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள்**

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | மருதானை | 02 |
| | பொரளை | 03 |
| | கறுவாத்தோட்டம் | 04 |
| | பம்பலப்பிட்டி | 05 |
| | ஹவ்லொக் ரவுன் | 06 |
| | நுகேகொடை | 07 |
| | மொறட்டுவை | 08 |
| | பிலியந்தலை | 09 |
| | ஹோமாகம | 10 |
| | மஹரகம | 11 |
| | ஹன்வெல்ல | 12 |
| | அவிஸ்ஸாவெல | 13 |
| 2. கம்பஹா | நீர்கொழும்பு | 14 |
| | மினுவாங்கொடை | 15 |
| | திவுலப்பிட்டிய | 16 |
| | வெயாங்கொடை | 17 |
| | கம்பஹா | 18 |
| | ஜா- எல | 19 |
| | வத்தளை | 20 |
| | களனி | 21 |
| | தொம்பே | 22 |
| 3. களுத்துறை | ஹொரணை | 23 |
| | பாணந்துறை | 24 |
| | களுத்துறை | 25 |
| | மத்துகம | 26 |
| | அளுத்கம | 27 |
| 4. மாத்தளை | மாத்தளை | 28 |
| | கலேவெலை | 29 |
| | நாவுல | 30 |
| | லக்கலை பள்ளேகம | 31 |
| 5. கண்டி | கண்டி | 32 |
| | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | தெல்தெனிய | 34 |
| | வத்தேகம | 35 |
| | நுகவெலை | 36 |
| | கலகெதர | 37 |
| | கம்பளை | 38 |
| 6. நுவரெலியா | ஹெதுனுவெவ | 39 |
| | நுவரெலியா | 40 |
| | வத்துமுல்ல | 41 |
| | ஹற்றன் | 42 |
| | கினிகத்ஹேன | 43 |
| 7. காலி | அம்பலாங்கொடை | 44 |
| | காலி | 45 |
| | பத்தேகம | 46 |
| 8. மாத்தறை | வெலிகம | 47 |
| | மாத்தறை | 48 |
| | கம்புருபிட்டி | 49 |
| | ஹக்மனை | 50 |
| | தெய்யந்தர | 51 |
| | திக்வெல்ல | 52 |
| | அக்குரஸ்ஸ | 53 |
| | கொட்டபொல | 54 |
| 9. அம்பாந்தோட்டை | பெலியத்தை | 55 |
| | வலஸ்முல்ல | 56 |
| | வீரகெட்டிய | 57 |
| | தங்கல்ல | 58 |
| | அம்பலாங்கொடை | 59 |
| | அம்பாந்தோட்டை | 60 |
| | திஸ்ஸமஹாராமை | 61 |
| 10. யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | யாழ்ப்பாணம் | 63 |
| | தெல்லிப்பளை | 64 |
| | பருத்தித்துறை | 65 |
| 11. மன்னார் | மன்னார் | 66 |
| | முருங்கன் | 67 |
| 12. முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13. வவுனியா | வவுனியா | 69 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 14. திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | திருகோணமலை | 71 |
| | மூதூர் | 72 |
| | பதவி பராக்கிரமபுர | 73 |
| | கிண்ணியா | 74 |
| 15. மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | ஏறாவூர் | 76 |
| | காத்தான்குடி | 77 |
| 16. அம்பாறை | அம்பாறை | 78 |
| | சேரங்கட | 79 |
| | கல்முனை | 80 |
| | அக்கரைப்பற்று | 81 |
| | சம்மாந்துறை | 82 |
| 17. புத்தளம் | வென்னப்புவ | 83 |
| | மாதம்பை | 84 |
| | சிலாபம் | 85 |
| | புத்தளம் | 86 |
| 18. குருநாகல் | குளியாப்பிட்டிய | 87 |
| | பிங்கிரிய | 88 |
| | நாரம்மல | 89 |
| | பொல்காவலை | 90 |
| | குருநாகல் | 91 |
| | இப்பாகமுவ | 92 |
| | தொடங்கஸ்லந்த | 93 |
| | மொறதிக | 94 |
| | நிக்கவெரட்டிய | 95 |
| | மாகோ | 96 |
| 19. அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | கெக்கிராவ | 98 |
| | அநுராதபுரம் | 99 |
| | கலென்பிந்துனுவெவ | 100 |
| | கஹட்டகஸ்திகிலிய | 101 |
| 20. பொலநறுவை | பொலநறுவை | 102 |
| | ஹிங்குரக்கொட | 103 |
| 21. பதுளை | பண்டாரவளை | 104 |
| | வெலிமடை | 105 |
| | பதுளை | 106 |
| | பசறை | 107 |
| | மகியங்கனை | 108 |
| | கிராந்துருகோட்டை | 109 |
| | ஹசலக்க | 110 |
| 22. மொனராகலை | பிபில | 111 |
| | மொனராகலை | 112 |
| | வெள்ளவாய | 113 |
| 23. கேகாலை | கேகாலை | 114 |
| | ரம்புக்கனை | 115 |
| | மாவனெல்லை | 116 |
| | ருவன்வெல்ல | 117 |
| 24. இரத்தினபுரி | எஹெலியகொடை | 118 |
| | இரத்தினபுரி | 119 |
| | பெல்மடுல்ல | 120 |
| | பலாங்கொடை | 121 |
| | கலவானை | 122 |
| | எம்பிலிபிட்டிய | 123 |
| 25. கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | பளை | 125 |

8-1067

---

## அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களைஅரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013(2014)

அரசாங்க சேவையில் கனிஷ்ட ஊழியர்களை அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. அரச சேவையைச் சார்ந்த கனிஷ்ட ஊழியர்களுக்காக இப் பரீட்சை கீழ்க்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந் நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே குறிப்பிடப்படுகின்றன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்து செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப் படி பரீட்சை நிலையம் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்ததைச் சார்ந்திருக்கும்.

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | திருகோணமலை | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| மாத்தளை | 04 | புத்தளம் | 17 |
| கண்டி | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | அநுராதபுரம் | 19 |
| காலி | 07 | பொலநறுவை | 20 |
| மாத்தறை | 08 | பதுளை | 21 |
| அம்பாந்தோட்டை | 09 | மொனராகலை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | கேகாலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| முல்லைத்தீவு | 12 | கிளிநொச்சி | 25 |
| வவுனியா | 13 | | |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அவரின் தீர்மானமே இறுதியானது.

(ii) பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல் களும் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் புறம்பாக அச்சிடப் பட்டுள்ளது. இவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

*4.* ***பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மொழிமூலம்.***- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தமது விருப்புப்படி இதில் ஏதேனும் ஒரு மொழியில் மட்டும் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவ தற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*5.* ***சம்பள அளவுத்திட்டம்.***- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி அரச முகாமை உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆகிய தரங்களுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 × 145 - 11 × 170 - 6 × 240 - 14 × 320 - 23,230 ரூபா 15,440 ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும் ரூ. 17,310 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

*குறிப்பு.*- நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தப் படும் சம்பள அதிகரிப்பு சட்டதிட்டங்களுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு நலன்களும் வழங்கப்படும்.

*6.* **சேவை நிபந்தனைகள் :**

(i) நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான உரிமையினை நியமன அதிகாரி கொண் டுள்ளார்.

(ii) அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதிந்துரைக்கப் பட்டுள்ள நியதிநிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தத்திற்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமா ணங்கள் மற்றும் 2009.02.20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தரம் III இலுள்ள பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுவர்.

(iii) இப்பரீட்சையில் வெற்றிபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி யிலிருந்து 3 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iv) இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனம் பெறும் பரீட்சார்திகள் இடமாற்றத்திற்கும் இத்தீவின் எப்பகுதியி லேனும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

(v) *அரசகரும மொழி.*- ஏதேனும் அரச கரும மொழியினை விட வேறு மொழி ஒன்றில் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அப் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் அரச கரும மொழிகளில் ஒன்றில் தேர்ச்சியினை அடைதல் வேண்டும்.

*இரண்டாவது அரச கரும மொழி.*- பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளி யிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 5 வருடங்கள் முடிவதற்கு முன்னர் இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

*7.* ***நியமனத்தின் பொருட்டு தெரிவுசெய்யும் முறை.***- அரச சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்கள் மட்டும் போட்டிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். பரீட்சைக்கான ஒவ்வொரு வினாப்பத்திரத் திற்கும் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரிகளை தெரிவு செய்து, அவர்களின் மொத்தப் புள்ளிகளுக்கமைய திறமை அடிப் படையில் தெரிவுசெய்யப்படுவர்.

***குறிப்பு.***- மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

*8.* ***தகைமைகள்.***- இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :-

(i) அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிப்பதுடன் கூறப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்டும் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இற்கமைய பிஎல் (PL)வகையில் ஆரம்ப மட்ட சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஓர் அலுவலராக இருத்தல் அத்துடன் MN-01-2006 A என்னும் சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் ஓர் அலுவலராக இருத்தல்.

(ii) விண்ணப்ப முடிவு திகதிக்கு உடன் முன்வரும் 5 வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றி யுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப் பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) கல்விப்பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் மொழி / இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ தூயகணிதம் / ஆரம்ப கணிதம்/ வர்த்தக எண்கணிதம் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல்.

(iv) பரீட்சார்த்தியானவர் சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(v) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட சகல தகைமைகளும் 2014 செத்தெம்பர் 29 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**குறிப்பு :**

(1) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்குமுன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டுக் காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/ அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான 5 ஆண்டு கால வெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது.

(2) மேற்படி (ii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஐந்து வருட திருப்திகரமான சேவைக் காலப்பகுதியானது பின்வரும் அடிப்படையில் வரையறுக்கப்படும். பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் நோக்கத்திற்காக திருப்திகரமான சேவையினைக் கொண்டுள்ளதாக கருதப்படுவர்.

(i) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து வருட காலப் பகுதியில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல்.

(ii) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முன்னர் ஐந்து வருட காலப்பகுதிக்குள் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது.

(3) நியமனத்தின் பொருட்டு விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுமிடத்து திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

(4) பகுதி தொழில்நுட்பச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களோ அல்லது ஏதேனுமொரு செயற்பாட்டிற்காக பயிற்றப்பட்டவர்களோ அல்லது அரசினால் விசேட முறையில் பயிற்சியளிக்கப்பட்ட எந்தத் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர்களாகக் கருதப்படுவர். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்களும், சுகாதாரத் திணைக்களத்தின் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவர். எவரேனுமொரு ஊழியர் தகைமையுடையவரா அல்லது தகைமையற்றவரா என்பதில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் பரீட்சார்த்தி அவரின் திணைக்களத்தில் விசாரிக்க வேண்டுமென்பதுடன் குறித்த திணைக்களம் அது தொடர்பில் "பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன்" தொடர்பு கொள்ள வேண்டும்.

இப்பரீட்சைக்காக தோற்றவுள்ள ஊழியரின் தகைமை பற்றி பொது நிர்வாக உள்நாட்டலுவலகள் அமைச்சைக் கேட்கும் வேளையில் சம்பந்தப்பட்ட திணைக்களம் சம்பள அளவுத்திட்டம் சகிதம் ஊழியரின் தொழில் தொடர்பான முன்னைய விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தொழிலைச் செய்வதற்கு வேண்டிய ஏதாவது பயிற்சி விண்ணப்பதாரிக்கு அளிக்கப்பட்டதா என்பதையும் அந்தப் பயிற்சிக்கான கால எல்லை, அதன் தன்மை என்பவற்றையும் குறிப்பிட வேண்டும்.

(5) அரசாங்க சேவையில் தற்காலிக , அமைய ஊழியர்கள் சபைகள் ,கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளின் ஊழியர்கள், இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர்களாவர்கள்.

(6) அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவை, கனிஷ்ட ஊழியர்களைத் தவிர்ந்த திணைக் களத்தின் வேறு எந்த ஊழியர்களும் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராவார்கள்.

(7) பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தாம் திருப்தியுறும் வகையில் இதில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாமல் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையின் போதிய அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பினும் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவார்கள்.

9. **விண்ணப்பங்கள்**.- (அ) (i) A4 அளவிலான ஒரு தாளினை (21 செ. மீ. ×29 செ. மீ.) (சாதாரண ஹாப் சீட்) பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 3 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 4 இலிருந்து மிகுதி வரையானவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும். இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பமானது தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பக்கூடாது. நிழற்படப் பிரதிகள் அல்லது முற்பிரதிகள் அனுப்பப்படக்கூடாது என மேலும் அறிவிக்கப் படுகின்றது. உரிய தகவல்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகக் கொடுக்கப்படல் வேண்டும். முழுமைப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது. பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு பரீட்சார்த்தியினால் முழுமைப்படுதப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பமானது நிராகரிக்கப்படலாம்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலெழுத்துக் களுடனான பெயரிலேயே தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும். ஆதலினால் கொடுக்கப்பட்ட தொடர்ந்து வரும் மாதிரிப் படிவத்தின் பெயரானது சரியாக எழுதப்படல் வேண்டும். நியனமங்கள் வழங்கும் போது பெயரினை மாற்றவோ அல்லது பெயரில் ஒரு பகுதியினை உள்ளடக்கவோ அல்லது ஒரு பகுதியினை அகற்றவோ அனுமதிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சைக் கட்டணங்கள்.- இப்பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். இது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 என்பதன் கீழ் ஏதேனும் மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகம் ஒன்றில் செலுத்தப்படலாம். அவ்வாறு பரீட்சார்த்தியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை எதிர்காலப் பயன்பாட்டுக்காக பரீட்சார்த்தியுடன் வைத்திக்கொள்ள வேண்டும்.) இக்கட்டணம் எந்தவொரு சூழ்நிலையிலும் மீளளிக்கப்படமாட்டாது. அதேவேளை இக் கட்டணம் தொடர்பில் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவமானது பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தியாக்கப்பட்டு பரீட்சார்த்திகள் பணியாற்றும் திணைக்களத் தலைவர்களினூடக 2014.09.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்,

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல.1503,
கொழும்பு.

என்னும் முகவரியினை அடையக்கூடியவாறு திணைக்களத் தலைவரூடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாறான ஒரு சான்றிதழ் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். 2014.09.29 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத் தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கு மாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சேவையாற்றும் சேவைநிலையம் மற்றும் பதவி என்பனவையே பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பம் அனுப்பியபின் அது தொடர்பாக ஏற்படும் எந்தவித மாற்றமும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசியின் பிரதி ஒன்றுடன் அனுமதி அட்டையையும் அனுப்புவார். இதற்கு ஒத்ததாக, அதனை அறிவிப்பதற்கு பத்திரிகை அறிவித்தலானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதிஅட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள வாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனின் குறித்த விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தை அனுப்பவதற்கான தொநைகல் (பக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பக்ஸ் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பப் படிவத்தினது நிழற்படப் பிரதியையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியும் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

12. பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளித்தல் தகவுத் திறமையை ஏற்றுக்கொண்டதென அமையாது. பின்னர் ஒரு கட்டத்தில் அது நுண்ணியதாக ஆராயப்படும். இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனப்பின்னர் கண்டுபிடிக்கப்படின் ஒரு விண்ணப்ப தாரரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப் பத்திலாவது நிராகரிக்கப்படும்.

13. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப் பரீட்சையின் பெறுபேறுகள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளம் மூலம் வெளியிடப்படும்.

14. **ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது ஆள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காக பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பிரயாணச் செலவு வழங்கப்படமாட்டாது.

16. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப் பரீட்சை சட்ட திட்டங்களின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப் பத்திலும் உண்மையற்றவையென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

17. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடங்களும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளன :

| பாடங்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தியெய்த வேண்டிய புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தகைமை காண் பரீட்சை | 100 | 40 | 2 1/2 மணித்தியாலம் |
| உளச்சார்பு | 100 | 40 | 1 மணித்தியாலம் |

**மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தகைமைகாண் பரீட்சை (காலம் : 2 1/2 மணித்தியாலங்கள்) :**

வெளிப்படுத்தல், கிரகித்தல், எழுத்துக் கோர்வை, மொழி மற்றும் கட்டுரை, கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க கடிதத்தினை வரைதல் , கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல், சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல், கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல், எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் பரீட்சார்த்தியின் திறனைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்களுடன் தொடர்புபட்ட பாடத்தினை இவ் வினாத்தாள் கொண்டிருக்கும்.

அலுவலக ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் விதம் மற்றும் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய கடிதம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் தொடர்பிலான அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் போன்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் கடமைகள் குறித்து பரீட்சார்த்தியின் அறிவினை சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள்.

நினைவூட்டல் நாட்குறிப்பு, பண உறுதிச் சீட்டுகள், நகர்வுத் தாள்கள், வரவுப் பதிவேடு, திகதியிடும் முத்திரை, முத்திரை, இறப்பர் முத்திரை மற்றும் தபால் பை, மற்றும் அவற்றின் பயன்பாடு போன்ற அலுவலகத்தில் பிரயோகிக்கப்படும் முறைமைகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவினைச் சோதிப்பதற்கான வினாக்கள், எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

பகுதி I : மொழித்திறன், சுருக்கம் மற்றும் கட்டுரை எழுதுதல் ஆகியவற்றைச் சோதிப்பதற்கென கிரகித்தல் தொடர்பான கட்டமைக்கப்பட்ட வினாக்கள். (1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் - 50 புள்ளிகள்)

பகுதி II : முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான உளச்சார்பினைச் சோதிப்பதற்கான ஒரு விடயம், கூற்று அல்லது பந்தியினை அடிப்படையாகக் கொண்டு குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட வினாக்கள் மற்றும் கட்டுரைகள். (1 மணித்தியாலமும் 15 நிமிடங்களும்- 50 புள்ளிகள்)

**உளச்சார்புப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம்) :**

பரீட்சார்த்தியின் எண்கள் தொடர்பான திறன்கள், தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது விவேகம் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கள் தொடர்பான பாடங்களை இவ் வினாத்தாள் உள்ளடக்கும்.

இது 50 பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடை மாதிரியையும் உள்ளடக்கும். ( காலம் : 01 மணித்தியாலம்) சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு :**

(i) இவ் வினாத்தாள்கள் சேவையின் கடமைகளை மேற்கொள்வதற்கு பரீட்சார்த்தியின் உளச்சார்பு மற்றும் ஆற்றலினைச் சோதிப்பதற்கு வடிவமைக்கப் பட்டன.

(ii) சகல எழுத்துமூல விடைத்தாள்களிலும், எழுத்துப் பிழைகள் மற்றும் தெளிவற்ற கையெழுத்து ஆகியவற்றுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.

18. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

19. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

கே.வீ.பி.எம்.ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2014 ஓகத்து 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை- 2013 (2014)**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE - 2013 (2014)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தைக் குறிப்பிடவும். (இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----
உதா : GUNAWARDHANA, M. G. B. S. K.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. சேவை நிலையமும் முகவரியும் :

2.1 அலவலகத்தின்/திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 தொலைபேசி இலக்கம் :

☐☐☐☐☐☐☐☐☐☐

4. சேவை விபரங்கள்.-

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் : -----.

4.2 அதற்குரிய அமைச்சு அல்லது திணைக்களம் :-----.

4.3 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

4.4 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

4.5 தற்போதைய பதவி நிரந்தரமானதா? தற்காலிகமானதா? : -----.

4.6 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? :----.

4.7 உறுதிப்படுத்தப்படுவதற்கு நீங்கள் தகைமையடைந்த திகதி : ----.

4.8 தற்போதைய பதவியில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பான கடிதத்தின் இலக்கமும் திகதியும்: -----.

4.9 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) :----.

4.10 சம்பள அளவத் திட்டம் (2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக்கமைய சம்பளக் குறியீடு PL - 2006A/PL - 2006 APL - 3 - 2006A/ MN - 01 - 2006A (பொருத்தமற்ற சொற்களைக் கீறி விடவும்)

4.11 தற்போதைய பதவி ஓய்வூதிய உரித்துடையதா? :----.

4.12 2014.09.29 ஆந் திகதியன்றுள்ளவாறு தற்போதைய பதவியில் மொத்தச் சேவைக்காலம் :----.

5. பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்:----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும்:----.
(iii) செலுத்திய தொகை:----.

(பற்றுச்சீட்டை, கழராதவாறு இவ்விடத்தில் ஒட்டிவிடவும்.)
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனப்படலாம்.)

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகின்றேன். இத்துடன் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவையென அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், அத்தவறு நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

(திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பம் இடப்படல் வேண்டும்)

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடுதல் வேண்டும.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு./திருமதி/செல்வி .............................. ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

1. திரு./திருமதி/செல்வி...............................இத் திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும் ;

2. அவர் நிரந்தரமான பதவியொனறினை வகிக்கின்றாரெனவும் ;

3. 2014.09.29 ஆந் திகதியன்று அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும் ;

4. நிரந்தர பதவியொன்றில் இவரை உறுதிப்படுத்தும் கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் ;

5. அவர் 2014.09.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையினை பூர்த்திசெய்துள்ளாரெனவும் ;

6. அவர் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 8.0 பந்தியில் விதிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அடங்கும் வேதனத்தைப் பெறுகின்றாரெனவும் அல்லது வேதனத் திட்டத்தில் உள்ளாரெனவும் ;

7. 2014.09.29 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 5 ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும் ;

8. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும் ;

9. 500 ரூபா பெறுமதியான ஒரு பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;

10. அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக் களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளன வெனவும் இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்பில் காணப்படும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு:**

(1) இச் சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம் பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழை அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லா வகையிலும் சரியான வையெனத் திருப்தியடைதல் வேண்டும்.

(2) தகைமைகள் பற்றிய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யாத எப்பரீட்சார்த்தியினதும் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படலாகாது.

8-1066

## திருத்தம்

### கல்வி அமைச்சு

### தமிழ் மொழிமூல பாடசாலைகளுடன் தொடர்புடைய தோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014

### Competitive examination for the Recruitment of Teacher Assistants Based on Schools for Estate related Schools of Tamil Medium - 2014

08.08.2014 ஆந் திகதிய 1875 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின்கீழான அறிவித்தலிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தில் முதலாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட-

வர்த்தமானி அறிவித்தலின் 2.6 மற்றும் 2.7 இற்கு அமைய அட்டவணை 1 மற்றும் 2 இன்படி குறித்த பாடம், பாட இலக்கம் மற்றும் அப்பாடத்துடன் தொடர்புறும் வெற்றிடங்களைக் கொண்ட 5 பாடசாலைகளைக் குறித்த பாடசாலைகளின் குறியீட்டு இலக்கங்கள் சகிதம் அட்டவணை 3 இன்படி கூண்டினுள் எழுதவும் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது-

வர்த்தமானி அறிவித்தலின் 2.6 மற்றும் 2.7 இற்கு அமைய அட்டவணை 1 மற்றும் 2 இன்படி குறித்த பாடம், பாட இலக்கம் மற்றும் அப்பாடத்துடன் தொடர்புறும் வெற்றிடங்களைக் கொண்ட 2 பாடசாலைகளைக் குறித்த பாடசாலைகளின் குறியீட்டு இலக்கங்கள் சகிதம் அட்டவணை 3 இன்படி கூண்டினுள் எழுதவும் என்று திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

மேலும், இவ்வறிவித்தலின் 9 ஆம் பந்தியில் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2013-02-13 என குறிப்பிடப்பட்டுள்ளது.

அது, 2003-02-13 என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

எம். கொடிப்பிலிஆராச்சி,
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (ஆசிரிய தாபனம்),
கல்விச் செயலாளருக்காக.

8-116